தினமணி

## தீவனங்களின் விலை உயர்வு: பால் கொள்முதல் விலை உயருமா?

சி.வேழவேந்தன்

First Published : 14 Feb 2011 01:18:54 AM IST

வேலூர், பிப். 13: மாடுகளுக்கான தீவனங்களின் விலை பல மடங்கு உயர்ந்துவிட்டதால், மாடுகளைப் பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.

வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள 315 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் நாள்தோறும் 2 லட்சத்து 81 ஆயிரத்து 131 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 80 ஆயிரம் லிட்டர் பால் உள்ளூர் தேவைக்கும், மீதமுள்ளவை சென்னைக்கும் அனுப்பப்படுகிறது. கறந்த பாலின் தரத்தை நிலைநிறுத்த வேலூர் மாவட்டத்தில் 6 தொகுப்பு பால் குளிரூட்டும் கொள்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

கொள்முதல் விலை பசும்பால் லிட்டர் ரூ.16.64!

இப்போது எருமைப் பாலுக்கு ரூ. 25.20, பசும்பாலுக்கு ரூ. 16.64 கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், பால் உற்பத்தியாளர்கள் பசும்பாலுக்கு மேலும் ரூ. 5-ம், எருமைப்பாலுக்கு ரூ. 8-ம் உயர்த்த வேண்டும் என நீண்டநாள்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஒருவாரமாக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாற்றுத் தொழிலுக்கு செல்லும் விவசாயிகள்!

மனிதனுக்கு உணவாகப் பயன்படும் அரிசி கிலோ ரூ. 1-க்கு விற்கப்படுகிறது. ஆனால், மாடுகளுக்கான உணவின் விலையே எட்டாத உயரத்தில் உள்ளது.

"இப்போது கோதுமைத் தவிடு ரூ. 650-க்கும் (50 கிலோ மூட்டை), அரிசி தவிடு ரூ. 450-க்கும், நொய் ரூ. 900-க்கும், புண்ணாக்கு ஒரு மூட்டை ரூ. 2,500-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், கறக்கப்படும் பால் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பாதிக்குமேல் தீவனமாகவே மாடுகளுக்கு கொடுக்கவேண்டியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கூட 1 லிட்டர் ரூ.15-க்கு விற்கப்படுகிறது. ஆனால், அரசு பாலுக்கு கொடுக்கும் விலை குறைவு. இதனால், பலர் மாடு வளர்ப்பதை விட்டுவிட்டு மாற்றுத் தொழிலுக்கு செல்கின்றனர்' என்கின்றனர் விவசாயிகள்.

ஆவின் பால் சில்லறை விற்பனைக் கடைகளில் லிட்டர் ரூ. 20, 24 எனவும், தனியார் பால் லிட்டர் ரூ. 28, 30 எனவும் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், விவசாயிகள் கேட்பதோ கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ. 20 மட்டுமே. இக்காரணங்களால் பால் கொள்முதல் விலையை உயர்த்த

வேண்டும் என்றும் இதேபோல் பால் விற்பனை விலையையும் அதிக அளவில் உயர்த்தாமல் கட்டுக்குள் வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இல்லையெனில், பால் உற்பத்தி பாதிக்கப்பட்டு, பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

மானிய விலையில் மாட்டுத் தீவனங்கள் வழங்கலாம்!

இதுகுறித்து பால் உற்பத்தியாளரான வேலூர் ரங்காபுரத்தைச் சேர்ந்த ரவி கூறியது:

இப்போது புண்ணாக்கு, கோதுமைத் தவிடு, நொய் உள்ளிட்டவற்றின் விலை அதிகமாக உள்ளது. வைக்கோல் ஒரு பிரி ரூ. 2-க்கு விற்பனையாகிறது. நாள்தோறும் ஒரு மாட்டுக்கு 50 பிரி கூட தேவைப்படும். பசும்புல் கட்டு ரூ. 40-க்கு விற்பனையாகிறது. பராமரிப்பு செலவை சமாளிக்க பசும்பால் ரூ. 20-க்கு கொள்முதல் செய்யவேண்டும் என்றார்.

எனவே, பசும்பாலை குறைந்தபட்சம் லிட்டர் ரூ. 20-க்கு கொள்முதல் செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மூலம் தீவனங்களை மானிய விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

**தலையங்கம்: பேசக்கூடவா மனமில்லை?**

First Published : 14 Feb 2011 01:25:35 AM IST

Last Updated : 14 Feb 2011 04:47:21 AM IST

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தினரின் போராட்டம் ஏழு நாள்கள் தொடர்ந்து நடைபெற்றும்கூட, அரசு இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் வாளாவிருக்கிறது. பால் உற்பத்தியாளர்களும் தொடர்ந்து பால் வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பது வழக்கம்போல பொதுமக்கள்தான்.

அண்மையில் அரசு பால் விலையை பசும்பாலுக்கு ரூ.1.10 காசும், எருமைப் பாலுக்கு ரூ. 2.20 காசும் அதிகரித்துக் கொடுத்தது. இதனால் பால் உற்பத்தியாளர்களுக்குப் பசும்பாலுக்கு ரூ.16.14-ம், எருமைப்பாலுக்கு ரூ.24.70-ம் கிடைத்து வந்தது. இதில் எருமைப் பால் என்பது மொத்தக் கொள்முதலில் வெறும் 3 விழுக்காடுதான். ஆகவே, தற்போதைய போராட்டம் பசும்பால் குறித்தது என்றே எடுத்துக் கொள்ளலாம். இப்போது ஒரு லிட்டர் பசும்பாலுக்கு மேலும் கூடுதலாக ரூ.5 கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான் பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கை.

பால் உற்பத்தியாளர்கள் கேட்பதுபோல விலையை உயர்த்தினால், அதன் எதிர்வினையாக சந்தையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் பாலின் விலையை லிட்டருக்கு ரூ.25 ஆக உயர்த்த நேரிடும். இந்த விலை உயர்வு பொதுமக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதும்,

தேநீர் விலை உள்பட பல்வேறு பால் தொடர்புடைய பொருள்களின் விலை உயர்வுடன், தேர்தல் நேரத்தில் தேவையில்லாத அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதும் அரசின் கருத்து. ஆகவேதான், இந்தப் பிரச்னையில் அரசு நடவடிக்கை எதுவும் எடுக்காமல் காலம் தாழ்த்துகிறது.

பால் உற்பத்தியாளர்கள் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது போராட்டம் நடத்தினால் அரசின் நேரடி கவனத்தைப் பெறலாம் என்று கருதித்தான் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினர். மேலும், தேர்தல் நேரம் என்பதால், குறைந்தபட்சம் இரண்டு ரூபாய் கொள்முதல் விலையைக் கூட்டினாலும்கூடப் போதும் என்கிற நம்பிக்கையும் காரணம். ஆனால், அரசு இவர்களைப் பேச்சு வார்த்தைக்குக்கூட அழைக்கவில்லை.

தற்போதைய போராட்டத்தில் பால் உற்பத்தியாளர்களும் தமிழக அரசும் தவறான போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதைத்தான் இந்த ஒரு வார காலச் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்தின் உறுப்பினர்கள் போராட்டம் நடத்தும்போது, ஆவின் நிறுவனம் தனியாரிடம் பால் வாங்குவது தவறு என்று பால் உற்பத்தியாளர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்துவது எந்த வகையில் சரி என்று புரியவில்லை. ஆவின் நிறுவனம் சென்னைக்கு மட்டுமன்றி, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் பால் விநியோகம் செய்தாக வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் செய்கிறார்கள் என்பதற்காக, ஆவின் நிறுவனம் செயல்படாமல் இருக்குமானால், நகர்ப்புறங்களில் உள்ள மக்கள், குழந்தைகளின் நிலை என்ன? ஓர் அரசு நிறுவனம் என்ற நிலையில், ஆந்திர மாநிலத்திலிருந்து பால் பெற்றாகிலும் வழங்க வேண்டிய கட்டாயம் ஆவினுக்கு இருக்கிறது. மேலும், இந்த ஒரு வாரகாலத்துக்குப் பால் வரத்து இல்லை என்று மூடிவிடுவார்களேயானால், தனியார் பால் நிறுவனங்கள் இந்த வாடிக்கையாளர்களைத் தங்கள் வசம் இழுத்துவிடும். அதன் பிறகு இந்தப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டாலும், ஆவின் பால் வாங்க மக்கள் முன்வர மாட்டார்கள். இதனால் பாதிக்கப்படுவது ஆவின் மட்டுமல்ல, போராட்டம் நடத்தும் பால் உற்பத்தியாளர்களும்தான் என்பது ஏன் போராட்டம் நடத்துபவர்களுக்குப் புரியவில்லை.

ஆவின் அல்லது அரசு தற்போதைய நிலையைச் சமாளிக்கத் தனியாரிடம் பால் கொள்முதல் செய்வதில் தவறில்லை என்றாலும், தனியாருக்குப் பால் உற்பத்தியாளர் கொடுத்த பால் முழுவதையும் தரம் குறைந்த பால் என்று பறிமுதல் செய்து வழக்குப் போடுவதும், பாலுக்கான விலை கிடைக்காமல் செய்துவிடுவதும், மிரட்டுவதும் நியாயமான செயல்பாடு அல்ல. மூன்றாம் தர வியாபாரிகள் கையாளும் அடாவடிப் போக்கை ஓர் அரசு நிறுவனம் மேற்கொள்வது தவறு!

பால் உற்பத்தியாளர்கள் தங்கள் பாலை வெண்ணெய் போன்ற மதிப்பூட்டிய பொருளாக மாற்ற வேண்டுமே தவிர, பாலை சாலையில் ஊற்றிப் போராட்டம் செய்வது தொலைக்காட்சி, பத்திரிகை புகைப்படத்துக்கு வேண்டுமானால் பயன்படுமே தவிர, சரியான போராட்ட முறை அல்ல.

உற்பத்தியாளர்கள் மீது மக்களுக்கு வெறுப்பைத்தான் ஏற்படுத்துமே தவிர, அனுதாபத்தையோ ஆதரவையோ தேடித் தராது.

குஜராத்தில் அமுல் நிறுவனத்தில் 29 லட்சம் உறுப்பினர்கள் 90 லட்சம் லிட்டர் பால் வழங்குகிறார்கள். ஆனால் அங்கே அவர்களுக்குக் குறைந்த விலையில் சரிவிகித கலப்புத் தீவனம் அமுல் நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. ஆனால், இங்கே, 4 லட்சம் உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருக்கும் ஆவின் நிறுவனத்தால் அதைக்கூடச் செய்ய முடியவில்லை. 6 லிட்டர் பால் கறக்கும் மாட்டுக்கு 3 கிலோ தீவனம் அளித்தாக வேண்டும். சரிவிகித கலப்புத் தீவனம் விலை கிலோ ரூ.13. கொள்முதல் விலையில் பெரும்பகுதி தீவனத்துக்கே சென்றுவிடுகிறது என்று பால் உற்பத்தியாளர்கள் கூறுவது முற்றிலும் உண்மை.

குடும்பத்துக்கு ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு ரூபாய் அரிசி, இரண்டு ரூபாய் கோதுமை எல்லாமும் கொடுக்கும்போது மாட்டுக்கும் மானியவிலையில் தீவனம் வழங்கினால் என்ன? கடந்த நான்கு ஆண்டுகளாக இது குறித்த எந்த முயற்சியிலும் ஈடுபடாத ஆவின் நிறுவனம்தான் இன்றைய இப்போராட்டத்துக்குக் காரணம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

பிரச்னையை முன்கூட்டியே அறிந்து முடிவெடுக்கக்கூட முடியவில்லை என்றால், பால்வளத்துறைதான் எதற்கு? அதற்கு ஓர் அமைச்சர், அதிகாரிகள் என்றெல்லாம் இருந்து என்னதான் பயன்? இனியும் தாமதிக்காமல் பால் உற்பத்தியாளர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, பிரச்னைக்கு உடனடியாக முடிவுகாண வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு.

**உழவுத்தொழிலில் உயிர்ப்பலி ஏன்?**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 14 Feb 2011 01:26:31 AM IST

மிகவும் பின்தங்கியுள்ள அவுரங்காபாதில் (மகாராஷ்டிர மாநிலம்) கடந்த அக்டோபர் மாதம் ஒரே நாளில் ஸ்டேட் வங்கி நடத்திய "கடன் திருவிழா'வில் (லோன் மேளா) 150 டாடா மெர்சிடிஸ் பென்ஸ் கார்கள் விற்கப்பட்டன. கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றிய அரசியல்வாதிகளும், ஸ்டேட் வங்கி அதிகாரிகளும், ""இந்தியக் கிராமங்கள் எழுச்சி பெற்றுவிட்டன" என்று கூறினார்கள். 7 சதவீத வட்டியில் காருக்குக் கடன் உண்டு. 12 சதவீத வட்டியில் டிராக்டர் எடுத்துச் செல்லலாம்.

ஒரு விவசாயி ஸ்டேட் வங்கியை அணுகி, ""நான் 5 ஏக்கரில் கரும்புப் பயிர் வைத்துள்ளேன் அல்லது துவரை போட்டுள்ளேன். 1 லட்ச ரூபாய் கடன் கொடுங்கள்" என்று கேட்டால், ""இதற்கெல்லாம் வேளாண்மைத் துறையில் திட்டங்கள் உண்டு. இங்கு பயிர்க்கடன் வழங்க நிறைய சட்டதிட்ட நடைமுறை உண்டு" என்று தட்டிக்கழித்துவிட்டு, ""செக்யூரிட்டி அடமானம்

இல்லாமல், டிராக்டர் வழங்கக் கடன் தருகிறேன். ரூ. 1 லட்சம் என்ன 10 லட்சம் தருகிறேன்" என்பார். 10 லட்ச ரூபாய்க்கு அந்த விவசாயி டிராக்டர் வாங்கி, 5 லட்ச ரூபாய்க்கு விற்றுவிடுவார். 12 சதவீத வட்டி கட்ட முடியாமல் 36 சதவீத வட்டிக்குக் கடன் வாங்கி, வங்கிக்கடனை அடைப்பார்.

கந்து வட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல் தற்கொலை செய்துகொள்ளும் பஞ்சாபின் கதை, இனி மகாராஷ்டிரத்திலும் இதர மாநிலங்களிலும் தொடங்கலாம். ரூ. 10 லட்சம் மதிப்புள்ள டிராக்டரை 5 லட்சத்துக்கு விற்கவேண்டிய நெருக்கடி பழைய கடன். ஒரு கடனை அடைக்க மறுகடன். மறுகடனை அடைக்க மறுகடன் அல்லது தற்கொலை.

மாநிலத்துக்கு மாநிலம் ஒரு விவசாயி கடன்படக்கூடிய சூழ்நிலை மாறுபடலாம். தற்கொலைக் காரணமும் வேறுபடலாம். 1991-க்குப்பின் கந்துவட்டிக்குக் கடன் வாங்கும் விவசாயிகள் மற்றும் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகின்றன.

1991-லிருந்து 2001-க்கு வரும்போது 26 சதவீதம் விவசாயிகள் கடனாளிகளாய் இருந்த நிலை, இன்று 48.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஏறத்தாழ இரண்டு மடங்காகக் கடனாளி விவசாயிகள் பெருகியுள்ளனர். அரசு வழங்கும் இப்புள்ளி விவரம் குறைவான மதிப்பீடுதான். விவசாயிகள் கடன்காரராவதற்குக் காரணம், அரசின் விவசாயக் கொள்கையே. பணவீக்கம் காரணமாக இடுபொருள் செலவு கூடுகிறது. நிர்ணயமாகும் அங்காடி விலை குறைவாயுள்ளது. வணிகப் பயிர்களை எடுத்துக்கொண்டால் அறுவடை சமயம் விலைகளை விழச்செய்யும் தந்திரங்களை வணிகர்கள், பெருமுதலாளிகள் கையாள்கின்றனர்.

குறைந்த வட்டியில் கடன் பெறமுடியாத விவசாயிகள், கந்துவட்டிக்காரர்களிடம் கடன் வாங்கித் திருப்பித்தர வழியில்லாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். மகளிர் சுயஉதவிக்குழு, "மைக்ரோ ஃபைனான்ஸ்' என்ற பெயரில் கந்துவட்டிக்காரர்களைப் பெருக்கியுள்ளோம். முன்பெல்லாம் கந்துவட்டித் தொழிலில் பெண்கள் பங்கேற்பு இல்லை. இன்று பெண்கள் இத்தொழிலில் கொடிகட்டிப் பறக்கின்றனர்.

எனது விவசாய நண்பர் ஒரு குத்தகை விவசாயி. அவருக்கு மிக அவசரமாக ரூ. 20 ஆயிரம் தேவைப்பட்டது. மகளிர் சுயஉதவிக்குழுத் தலைவி ஒருவரை அணுகினார். ""ஐயா எங்கிட்ட பணம் இல்லை. எனக்குத் தெரிந்த ஒருவரிடம் பேசி வாங்கித் தருகிறேன். அவரு என்ன மாதிரி நல்லவங்க இல்லை. ரொம்பப் பொல்லாதவரு. வட்டி கரெக்டா வரலைன்னா அடிச்சு உதைப்பாங்க" என்று அத்தலைவி கூறி, 4 வட்டிக்கு ரூ.20 ஆயிரம் நண்பருக்கு வழங்கினார். அதாவது வட்டி 48 சதவீதம்.

ஓராண்டுக்குப் பிறகு நண்பரைச் சந்தித்து, ""கடனை அடைத்து விட்டீர்களா?" என்று கேட்டேன். ""ரூ.30 ஆயிரம் வரை வட்டி அசல் கொடுத்துவிட்டாலும், பத்திரத்தைத் திருப்பித்தர மாட்டேங்கராங்க. மேலும், ரூ. 10 ஆயிரம் கட்டணுமாம். ரூ.5 ஆயிரத்துக்குப் பேசி முடிக்கலாம்" என்று கட்டைப் பஞ்சாயத்து செய்யும் கட்சிக்காரர் சொல்வதாகக் கூறுகிறார். அந்த அம்மாவுக்கு

சாதகமாகக் கட்டைப் பஞ்சாயத்து செய்ய உள்ளூர் பிரபலங்கள் அலைகின்றனர். தமிழ்நாட்டு கிராமங்களின் நிஜமான நடப்பு இதுதான். வங்கிப் பணத்தால் விவசாயம் எழுச்சி பெறவில்லை. கந்துவட்டி எழுச்சிபெற்றுள்ளது.

விவசாயிகளின் தற்கொலை பற்றிய புள்ளிவிவரங்களை யார் தருகிறார்கள்? மத்திய உள்துறை அமைச்சகத்தில் என்.சி.ஆர்.பி. அதாவது, "நேஷனல் கிரைம் ரெகார்டு பீரோ' என்று ஒரு பிரிவு உள்ளது. தேசியக் குற்றப்பிரிவு அரங்கம் என்று தமிழில் சொல்வோம்.

1995-லிருந்து இந்த அரங்கம் விவசாயிகளின் தற்கொலைகளைப் பதிவு செய்து வந்தாலும், 1997-லிருந்து தகவல்கள் வழங்கப்படுகின்றன. இந்த அரங்கம் வழங்கும் தகவல்கள் குறைந்த மதிப்பீடு என்றாலும், 2009-ல் 17,368 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கிராமங்களின் புது எழுச்சி என்று "கடன்விழா' கொண்டாடும் இந்தியாவுக்குப் பரிசு "விவசாயிகளின் தற்கொலைகள்'.

தமிழ்நாட்டு சமாசாரம் எதுவெனில், 2008 வரை விவசாயிகளின் தற்கொலைப் புள்ளிவிவரங்களைத் தேசியக் குற்றப்பிரிவு அரங்கத்துக்கு அனுப்பவில்லையாம். இவ்வாறே ராஜஸ்தானும் அனுப்பவில்லை. 2009-ல் இந்த இரண்டு மாநிலங்களிலும் 1,900 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக வந்த தகவல், குறைவான மதிப்பீடு. ஏராளமான விவசாயிகளின் தற்கொலைகள் பதிவாகவில்லை என்பதும் உண்மை. அரசுத் தரப்பு புள்ளிவிவரங்களின்படி விவசாயிகளின் தற்கொலை 1997-லிருந்து இன்றுவரை 2,16,500 என்பதாக உள்ளது.

2004-க்குப்பின் இன்றுவரை ஆண்டுக்கு ஆண்டு விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. 1994-க்குப் பின் விட்டுப்போன விவரங்கள் பலவற்றைச் சேர்த்துக் கூட்டிப்பார்த்தால், 1995 லிருந்து 2010 வரை கடந்த 15 ஆண்டுகளில் 2,56,949 என்பது அரசுப் புள்ளிவிவரம்.

தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளில் ஆண்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது மேற்படி புள்ளிவிவரத்தில் உள்ள குறைபாடு. இதே அளவு பெண்களின் தற்கொலைகளும் இருக்கலாம்.

கந்துவட்டித் தொழிலில் பெண்களும் வங்கிப்பணத்தை விளையாடத் தொடங்கிவிட்டதால், பெண்களிடம் பெண்களே விவசாயத்துக்குக் கடன் வாங்கி வட்டியில் மூழ்கிவிட்ட கதைகள் வெளிவரவில்லை. சுமார் 2.5 லட்சம் தற்கொலை என்றால், அதனால் பாதிக்கப்பட்ட மற்ற குடும்ப உறுப்பினர்களின் சோகம் தொடர்கிறது.

அப்பா கடன் வாங்கி அடைக்க முடியாமல் இறந்துவிட்ட சூழ்நிலையில், அப்பொறுப்பு மகனுக்கோ, மனைவிக்கோ மாற்றப்படுகிறது. மனிதகுல வரலாற்றில் எந்த ரத்தப் புரட்சியும் இல்லாமல், தன்னைத்தானே ஒருவன் மாய்த்துக் கொள்ளும் துயரங்கள் இந்திய தேசத்துக்கு மாறாத களங்கம் அல்லவா? இந்த நிலை சுதந்திர இந்தியாவுக்கு மாறாத அவமானம் அன்றோ!

மாநில வாரியாக விவசாயிகளின் தற்கொலைப் புள்ளி விவரங்களை அலசிப்பார்த்தால், இன்னமும் மகாராஷ்டிர மாநிலத்தில் விதர்ப்பா விவசாயிகளே முதலிடத்தில் உள்ளனர். மொத்தத் தற்கொலைகளில் 3-ல் 2 பங்கு மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகும்.

தமிழ்நாட்டில் 2008-ல் 512 விவசாயிகளின் தற்கொலை 2009-ல் 1060 ஆக உயர்ந்துள்ளது. தற்கொலைகளின் விகிதாசார வளர்ச்சி மேற்கண்ட 5 மாநிலங்களில் ஒரே சீராக உள்ளது. மேற்கு வங்கத்தில் ஆண்டுக்கு ஆண்டு விவசாயிகளின் தற்கொலைகள் குறைந்து வருகிறதாம். தமிழ்நாட்டில் உயர்ந்து வருகிறதாம். எனினும், 2009-ல் தமிழ்நாடு 7-வது இடத்தைப் பெற்றுள்ளது. இதற்குத் தமிழ்நாட்டில் கந்துவட்டித் தொழிலின் பிரம்மாண்ட வளர்ச்சியும் ஒரு காரணம்.

உழவுத்தொழில் உயிர்ப்பலிகளுக்கு நிபுணர்களால் கூறப்படும் மற்றொரு காரணம் குத்தகை விவசாயிகளின் துயரம். குத்தகை விவசாயிகளைப் பற்றிய ஆய்வு ருசிகரமான விஷயமும்கூட. குத்தகை விவசாயிகள் யார்? இன்றைய நிலை நேற்றைய நிலையைவிட மோசம். நேற்றைய நிலையை நினைக்கும்போது மூப்பனார், மூப்பனாரின் தோப்பனார், பூண்டி வாண்டையார், குன்னியூர் அய்யர், கோட்டூர் அய்யங்கார், வலிவலம் தேசிகர், மன்னார்குடி மைனர், திருவாரூர் முதலியார் போன்றவர்களிடம் முன்பு இருந்த சொத்துகள் இப்போது இல்லை. நில உச்சவரம்புச் சட்டம் வந்தபோது, சொத்துகளை முடிந்தவரை பிரித்து எழுதினார்கள். குத்தகையாளர், குடிக்காணிகளுக்கு விற்றுவிட்டார்கள்.

பூண்டி வாண்டையார் புஷ்பம் கல்லூரியை மாபெரும் நிலப்பரப்பில் நிறுவி, இன்று அது பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்ந்துவிட்டது. திருவாரூர் முதலியார் தொழிலதிபரானார். குன்னியூர், கோட்டூர், மன்னார்குடி வாரிசுகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். என்று உயர்ந்த படிப்புக்குப்போய் நகரவாசிகளாக இடம் பெயர்ந்துவிட்டனர்.

மேற்படி நிலப்பிரபுக்களிடம் பணிபுரிந்தவர்கள், குடிக்காணிகள் இன்று குட்டி நிலப்பிரபுக்களாகி விட்டனர். பழைய நிலப்பிரபுக்களுக்கு மணலி கந்தசாமியும், பி.ராமமூர்த்தியும் சிம்ம சொப்பனமாயிருந்தனர். இன்றுள்ள குட்டி நிலப்பிரபுக்களுக்கு கம்யூனிஸ்டுகளைக் கண்டு பயமே இல்லை. குத்தகை நிலங்களை இவர்கள் பதிவு செய்வதே இல்லை. குத்தகையே வாய்ப்பேச்சுதான். செக்யூரிட்டி அடிப்படையில் குத்தகை விவசாயிகளுக்குக் கடன், குறைந்த வட்டியில் வங்கிக்கடன் கிடைப்பது இல்லை. எப்படிப்பட்ட வாய்ப்பேச்சு என்றால், இது இரண்டு விதமாக உள்ளது.

குத்தகைக்கு நிலம் வாங்கிப் பயிரிடுவோர், மொத்தமாக ஒரு விலை பேசி நிலச் சொந்தக்காரர்களுக்கு முன்பணம் வழங்கிவிட்டு ஓராண்டு, இரண்டு ஆண்டு அனுபவித்தல். லாப-நஷ்டம் குத்தகைதாரர்களையே சாரும். தமிழ்நாட்டில் இப்படித்தான் அதிகம் நிகழ்கிறது. மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் விளைச்சலில் 50 சதம் செலவு குத்தகையாளர்களுடையது.

தேசிய மாதிரி ஆய்வு கணித்த புள்ளிவிவர அடிப்படையில், பதிவு இல்லாமல் குத்தகைதாரர்கள் செய்யும் சாகுபடி நிலங்கள் மாநிலத்துக்கு மாநிலம் 10 முதல் 30 சதவீதம் என்று வேறுபடுவதாகவும், குத்தகைக்கு நிலம் வாங்கி சாகுபடி செய்வோரில் 36 சதவீதம் நிலமற்ற ஏழைகள்.

சுமார் 48 சதவீதம் ஒண்ணேகால் ஏக்கர் பேர்வழிகள். தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளில் குத்தகை விவசாயிகளும் கணிசமாக இருப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. இந்தப் பிரிவினர்-இந்த ஒண்ணேகால் ஏக்கர் விவசாயிகளில் கணிசமானவர், கந்து வட்டிக்குக் கடன்வாங்கி விவசாயம் செய்கிறார்கள்.

இந்தியாவின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படும் - உழைக்கும் உழவர் வர்க்கம் விரும்பும் விடுதலை கந்துவட்டிக்கடன். கடனே வாங்காமல் சொந்தமாக விவசாயம் செய்பவர்களே நஷ்டப்படும்போது, உழைப்பைப் பணயம் வைத்துக் கந்துவட்டிக்குக் கடன்வாங்கி அவன் எப்போது தலை நிமிர்வான்? அப்படி நிமிரமுடியாமல் தொங்கிப்போன விவசாயிகளின் தலைகள் இரண்டரை லட்சம். இதுதான் இந்தியாவா? பாரதமாதா வெட்கித் தலை குனிந்துவிட்டாள்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்: வைகோ**

First Published : 14 Feb 2011 04:02:43 AM IST



சென்னை, பிப். 13: பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று கொள்முதல் விலையை உயர்த்த தமிழக அரசு முன்வர வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழக பால் உற்பத்தியாளர்கள், உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என கோரி வருகின்றனர்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 7-ம் தேதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தவிடு, மாட்டுத் தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆவின் உற்பத்தி செய்யும் தீவனங்களின் விலை 2006-ல் இருந்ததைவிட 3 மடங்கு உயர்ந்துள்ளது.சென்னை, மதுரை, ஆம்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த ஆவின் தீவன உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால், பால் உற்பத்தியாளர்களுக்கு தீவனங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு

ஏற்பட்டுள்ளது. தீவன விலையேற்றத்துடன் ஒப்பிட்டு, பாலின் கொள்முதல் விலையை மும்மடங்கு உயர்த்தாவிட்டாலும், குறைந்தபட்சமாகவாவது விலையை உயர்த்த வேண்டும்.
அரிசி, சமையல் எரிவாயு, பொங்கல் பொருள்களை மானிய விலையில் விற்பது போல, நுகர்வோருக்குப் பாதிப்பு இல்லாத வகையில் மானிய விலையில் பால் வழங்கிடவும், உற்பத்தி செலவின் அடிப்படையில் பாலுக்கான கொள்முதல் விலையை லிட்டருக்கு குறைந்தபட்சம் ரூ.5 வரை உயர்த்தி வழங்கவும் அரசு முன்வரவேண்டும் என வைகோ வலியுறுத்தியுள்ளார்.

**சென்னையில் இரு இடங்களில் உழவர் சந்தைகள்**

First Published : 13 Feb 2011 03:19:51 PM IST

காஞ்சிபுரம், பிப். 12: சென்னையில் துரைப்பாக்கம், திருமங்கலம் ஆகிய இரு இடங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்படும் என்று வேளாண் விற்பனைக் குழு இயக்குநர் விவேகானந்தன் தெரிவித்தார்.
காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத், படப்பை, கூடுவாஞ்சேரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் உழவர் சந்தைகளை பார்வையிட்ட அவர், பின்னர் காஞ்சிபுரம் உழவர் சந்தைக்கு வந்தார். அங்குள்ள வியாபாரிகள் மற்றும் நுகர்வோரின் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியது:
தமிழகம் முழுவதும் புதிய உழவர் சந்தைகள் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உழவர் சந்தைகள் மூலம் தினம்தோறும் 4 லட்சத்து 13 ஆயிரம் பேர் பயன் பெறுகின்றனர். 2,262 டன் காய்கறிகள் விற்பனையாகின்றன. ரூ.3.7 கோடி அளவுக்கு விற்பனை நடைபெறுகிறது. தமிழகத்தின் நகர்புற பகுதி மக்களும் பயன் பெறும் வகையில் சென்னையை அடுத்த துரைப்பாக்கம், திருமங்கலம் ஆகிய பகுதிகளில் உழவர் சந்தைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என்றார்.
இந்த ஆய்வின்போது காஞ்சிபுரம் சிறுகாவேரிப்பாக்கம் பகுதியில் தமிழக அரசால் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட தலைமையக கட்டடப் பணிகளை பார்வையிட்டார்.
வேளாண்மை துணை இயக்குநர் கா.சம்பத், வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், செயலர் எஸ்.கருணாநிதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**நெல்லுக்கு உரிய விலை: நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்**

First Published : 13 Feb 2011 03:24:55 PM IST

புதுச்சேரி, பிப்.12: நெல்லுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசியவாத காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கட்சியின் புதுச்சேரி தலைவர் ஜி. சுந்தரமூர்த்தி வெளியிட்ட அறிக்கை:

புதுச்சேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டில் அறுவடை செய்த சம்பா நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்ததை விட குறைவான விலை நிர்ணயிக்கப்படுவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் மத்திய அரசின் விலை நிர்ணயித்தபடி மத்திய உணவுக் கழகம் பெருவாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்து விவசாயிகள் பலனடையும் வகையில் நெல்லுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்தது.

தற்போது மத்திய உணவுக் கழகம் ஒருமுறை மட்டும் வேக வைத்த அரிசியை அரிசி மில் அதிபர்களிடம் நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. இதனால் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

மத்திய உணவுக் கழகத்துக்கு அரிசி சப்ளை செய்யும் அனைத்து மில் உரிமையாளர்கள் ஒருங்கிணைந்து ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு வரும் நெல்லை குறைந்த விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். இதனால் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

விவசாயத் துறையை நிர்வகித்து வரும் புதுச்சேரி முதல்வர் வைத்திலிங்கம், மத்திய அரசு நிர்ணயித்த நெல் விலையை விவசாயிகளுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுகொண்டுள்ளார்.

**உளுந்து, பச்சைப்பயறு வகைகளுக்கு காப்பீடு செய்ய வேண்டுகோள்**

First Published : 13 Feb 2011 03:17:31 PM IST

கடலூர், பிப். 12: கடலூர் மாவட்டத்தில் உளுந்து (படம்), பச்சைப்பயறு பயிரிடும் விவசாயிகள் வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

÷இதுகுறித்து கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன், செயலர் கார்மாங்குடி வெங்கடேசன் ஆகியோர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

÷கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து வட்டங்களிலும் உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. ஜனவரி மாதம் நெல் சாகுபடியில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் உளுந்து, மார்ச், ஏப்ரல் மாதத்தில் அறுவடைக்கு வரும்.
÷ஆனால் இந்த மாதங்களில் எதிர்பாராமல் பெய்யும் மழை காரணமாக உளுந்து அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் நஷ்டத்துககு உள்ளாகிறார்கள். இதைத் தவிர்க்கும் பொருட்டு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து, பயிர்க் காப்பீடு செய்யும் வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
÷÷உளுந்து மற்றும் பச்சைப்பயறுக்கு காப்பீட்டுத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 44. சிறு விவசாயிகளுக்கு 55 சதவீதம் மானியம் போக ரூ. 20-ம் பெரிய விவசாயிகள் 50 சதவீதம் மானியம் போக ரூ.22-ம் பிரீமியத் தொகையாக செலுத்த வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் கொடுத்து காப்பீடு செய்து கொள்ளலாம்.
÷கடந்த 2008, 2009, 2010 ஆகிய 3 ஆண்டுகளிலும் அறுவடைக்குத் தயாராக இருந்த உளுந்து, பச்சைப்பயறு மழையினால் சேதம் அடைந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.
÷எனவே இதுபோன்ற நஷ்டங்களை தவிர்க்கும் பொருட்டு உளுந்து, பச்சைப்பயிறு வகைகளுக்கு காப்பீடு செய்யும் வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு உள்ளனர்.

தினமலர்

**காய்ந்து வரும் மார்க்கெட் மரக்கன்றுகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,01:25 IST

எஸ்.விவேக் / கோயம்பேடு : அரசு பயன்பாட்டிற்காக பெரிய பச்சை மரங்களை வெட்டினால், அதை ஈடுசெய்யும் வகையில் புதிய மரக்கன்றுகள் நட வேண்டுமென்றும் என்ற உத்தரவு, கோயம்பேடு மார்க்கெட் சாலையில் மீறப்பட்டுள்ளது.கோயம்பேடு போலீஸ் நிலையத்தை ஒட்டிச் செல்லும் மார்க்கெட் சாலையின் இருபக்கமும் நான்கு மீட்டர் வீதம் விரிவாக்கம் செய்யப்பட்டது. மார்க்கெட் காம்பவுண்ட் சுவரையொட்டி வரிசையாக இருந்த 40க்கும் மேற்பட்ட நிழல் தரும் மரங்கள், மெட்ரோ ரயில் திட்டப் பணிக்காக அகற்றப்பட்டன.ஒரு மரம் வெட்டப்படும் போது அதற்கு இணையாக பல மரக்கன்று நட வேண்டும் என்பது ஐகோர்ட் உத்தரவு. இதற்காக, கோயம்பேடு பூ மார்க்கெட்டிற்கு பின்புறம் உள்ள பகுதியில் மெட்ரோ ரயில் திட்டத் துறை

சார்பில், 300க்கும் மேற்பட்ட குழிகள் தோண்டப்பட்டு மரக்கன்றுகள் நடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
குமிழ் தேக்கு, பெல்டா பார்ம் உள்ளிட்ட வகைகளை சேர்ந்த 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ள நிலையில், மற்ற மரக்கன்றுகள் நடுவது கிடப்பில் போடப்பட்டுள்ளது. பாலித்தீன் கவரை அகற்றி, தோண்டப்பட்ட குழியில் மரக்கன்றுகள் வைக்கப்படாமல் வெயிலில் காய்ந்து கருகி வருகின்றது.ஒரு செடியின் மதிப்பு 200 முதல் 300 ரூபாய் வரையுள்ள நிலையில் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள செடிகளை கிடப்பில் போட்டுள்ளனர். மேலும், நடப்பட்ட 100க்கும் மேற்பட்ட செடிகள் வைக்கப்பட்ட இடத்தை சுற்றி பாதுகாப்பு கம்பி வளையம் அமைக்கப்படாமலும், தண்ணீர் ஊற்றப்படாததாலும் அவைகளை ஆடு, மாடுகள் மேய்ந்து செல்கின்றன.இதை மெட்ரோ ரயில் திட்டத் துறையினரும், மார்க்கெட் நிர்வாக அங்காடி குழு அதிகாரிகளும் கவனத்தில் கொண்டால் மட்டுமே, மடிந்து போன மரக்கன்றுகள் உயிர்ப்பிக்க வழி பிறக்கும்.கோயம்பேடு மார்க்கெட் நிர்வாக குழு அதிகாரி ஒருவர் கூறியதாவது:வெட்டப்பட்ட மரங்களுக்கு பதிலாக புதிய மரங்கன்றுகளை, மார்க்கெட் பகுதியில் எந்தெந்த பகுதியில் நட வேண்டும் என எங்களை கலந்து ஆலோசிக்காமல், காலியாக இருந்த இடத்தில் இஷ்டத்திற்கு வைத்தனர்.தகுந்த பராமரிப்பு திட்டம் இல்லாததால், பல மரக்கன்றுகள் காய்ந்து விட்டன. காய்ந்த மரக்கன்றுகளுக்கு பதில் புதிய மரக்கன்றுகளை வைக்க ஏற்பாடு செய்யப்படும்.இவ்வாறு நிர்வாக குழு அதிகாரி கூறினார்.

**விவசாயிகள் விரும்பும் புதிய ரக "ரோட்டாவேட்டர்' கலப்பை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,01:35 IST

சு.மணவாளன்/ வாலாஜாபாத் : காஞ்சிபுரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயிகள் நிலத்தை உழுவதற்கு, பவர்டில்லர் மற்றும் சாதாரண ஏர் கலப்பைகளைப் பயன்படுத்துவது குறைந்து வருகிறது. புதிதாக "ரோட்டாவேட்டர்' என அழைக்கப்படும் சுழற்கலப்பையைப் பயன்படுத்தத் துவங்கியுள்ளனர்.
காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். பெரும்பாலான விவசாயிகள் ஆண்டிற்கு மூன்று போகம் பயிரிடுகின்றனர். தண்ணீர் இல்லாத விவசாயிகள் பயறு விதைக்கின்றனர். இந்தாண்டு பருவ மழை காரணமாக ஏரிகள் நிரம்பியுள்ளன. விவசாயிகள் நவரைப் பட்டத்தில் நெல் பயிரிட உழவுப் பணிகளை துவக்கியுள்ளனர்.
பெரும்பாலான விவசாயிகள் புதிய "ரோட்டாவேட்டர்' சுழற் கலப்பையைக் கொண்டு, தங்கள் நிலங்களில் உழவுப் பணியை துவக்கியுள்ளனர். புதிய ரக கலப்பையில், கடினமான நிலத்தை கூட எளிதாக உழவு செய்து சேற்றை உருவக்க முடிகிறது. சாதாரண கலப்பை வைத்திருக்கும் விவசாயிகளும், புதிய ரக கலப்பைகயை தேடி நிலங்களில் உழவுப் பணி செய்கின்றனர்.புதிய ரக

கலப்பையை டிராக்டரில் பொருத்தி நிலத்தை உழவு ஒரு மணி நேரத்திற்கு 800 ரூபாய் முதல் 900 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கின்றனர். சாதாரண கலப்பையில் உழவு செய்வதை விடக் கூடுதல் செலவானாலும், பலன் அதிகம் என்பதால் விவசாயிகள் புதிய கலப்பையைப் பயன்படுத்தி உழவு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.
ஒரு ஏக்கர் நிலத்தை சாதாரண கலப்பையால் உழுவதற்கு, குறைந்தது 2 மணி நேரம் பிடிக்கும். வேகமாக டிராக்டரை ஓட்டினால் ஒன்றரை மணி நேரத்தில் உழவுப் பணி முடிந்து விடும். இதற்கு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு 600 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை செலவாகிறது.கோவிந்தவாடி அகரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி சீனு கூறியதாவது: புதிய கலப்பையில் உழவு செய்தால், "களை' குறைவாக இருக்கும். இதனால் களை எடுக்கும் கூலி மிச்சமாகிறது. சாதாரண கலப்பையில் உழவு செய்தால் சேற்றை உருவாக்க நாட்கள் கூடுதலாகும். நடவு செய்யப்படும் நெற்பயிர்களில் களை அதிகமாக காணப்படும். அவற்றை நீக்க கூடுதல் செலவாகும். புதிய ரக கலப்பையைப் பயன்படுத்தும் போது செலவு குறைகிறது.இவ்வாறு சீனு தெரிவித்தார்.

**கொளத்தூர் பகுதியில் வளரும் மலை, குளிர் பிரதேச வாழை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,02:40 IST

மேட்டூர்: மலை மற்றும் குளிர் பிரதேசங்களில் செழித்து வளரும் ரோபெஸ்டா வாழை, கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள மலையடிவார கிராமங்களில் செழிப்பாக வளர்வது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.தோல் பச்சை நிறமாக காட்சியளிக்கும் ரோபெஸ்டா வாழை ரகம், குளிர் பிரதேசத்தில் மட்டுமே செழித்து வளரும் தன்மை கொண்டது. தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல் உள்பட குளிர் பிரதேசத்தில் உள்ள மலைப்பகுதியில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

மேட்டூர் அடுத்த கொளத்தூர் வட்டாரத்தில், விவசாயிகள் ஆண்டுதோறும் 250 ஹெக்டேர் நிலப்பரப்பில் வாழை சாகுபடி செய்கின்றனர். எனினும், உஷ்ணம் தாங்கி வளரும் தன்மை கொண்ட கதலி ரக வாழைகளே கொளத்தூர் பகுதியில் 90 சதவீதம் சாகுபடி செய்யப்படுகிறது.செட்டியூர், மூலக்கடை, கண்ணாமூச்சி போன்ற கிராமங்கள் பாலமலை அடிவாரத்தில் உள்ளது. குளிர்காலத்தில் கொளத்தூரின் இதர பகுதிகளை விட பாலமலை அடிவார கிராமங்களில் குளிர் அதிகமாக இருக்கும். அதை கணக்கில் கொண்டு விவசாயிகள் பலர் சமீபகாலமாக ரொபெஸ்டா வாழை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்.கோடைகால துவக்கத்தில் சாகுபடி செய்யப்படும் வாழை, குளிர்கால துவக்கத்தில் முதிர்ச்சியடைய துவங்கும். தொடர்ந்து நான்கு மாதம் குளிராக இருக்கும் என்பதால் வாழையில் காய்கள் செழித்து வளர்கின்றன. அதன் மூலம் போதிய வருவாய் கிடைப்பதால், ரொபெஸ்டா வாழை சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது.விவசாயிகள் கூறியதாவது:கதலி ரக வாழைத்தார், 15 கிலோ எடை இருக்கும்.

ரோபெஸ்டா வாழைத்தார் அதிகபட்சம், 40 கிலோ எடை வரை வளரும். காய்கள் பெரிதாக இருக்கும். கதலி வாழை பழங்கள் விலை அதிகம். ரோபெஸ்டா காய்கள் விலை குறைவு. ஆனால், எடை அதிகமாக இருப்பதால், கதலி வாழைத்தாரை விட கூடுதல் விலையால், லாபம் கிடைக்கிறது,' என்றனர்.

**பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் கறவை மாடுகளுக்கு உடல் நல பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,00:01 IST

தர்மபுரி: பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரி பால் உற்பத்தியாளர்கள் நடத்தும் போராட்டத்தினால், கறவை மாடுகள் போதிய பராமரிப்பு இல்லாமல் உடல்நல பாதிப்புகள் அடைந்துவருகிறது. பால் உற்பத்தியாளர்கள் கடந்த ஒரு வாரமாக பால் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கும் வரை பால் கூட்டுறவு நிலையங்களுக்கு பால் ஊற்றுவதில்லை என கூறி கறந்த பாலை தரையில் வீணாக ஊற்றுகின்றனர். பால் வர்த்தகம் நடக்காததால், பால் உற்பத்தியாளர்கள் தங்கள் கறவை மாடுகளை கவனிக்க போதிய அக்கறை செலுத்துவதில்லை. பால் கொள்முதல் இல்லாததால், தினம் பால் கறக்கும் மாடுகளின் பால் அளவை குறைக்கும் வகையில் அடர் தீவனங்கள் வழங்குவதில்லை, பணம் கொடுத்து வாங்கி வைத்திருக்கும் கலப்பு தீவனங்களை ஸ்டாக் வைத்துவிட்டு, சாதாரண மேய்ச்சல் நிலத்தில் கட்டி வைத்துவிடுகின்றனர். இதனால், பால் கறக்கும் மாடுகளுக்கு உணவு சத்து பற்றாகுறை ஏற்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் குறிப்பாக பென்னாகரம், பாலக்கோடு பகுதிகளில் மாடுகளுக்கு போதிய அடர் தீவனம் மற்றும் கலப்பு தீவனங்களை வழங்காததால், கொழுப்பு மற்றும் புரத சத்து ஏற்பட்டு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக கால்நடைத்துறை சார்பில் இயக்கப்படும் நடமாடும் கால்நடை மருந்தக அலுவலர்கள் கூறியுள்ளனர். மேலும் கால்நடை மருத்துவமனைகளுக்கு தினசரி வரும் மாடுகளை விட தற்போது அதிகமான மாடுகள் சிகிச்சைக்காக அழைத்துவருகின்றனர். பால் பணத்தை நம்பியிருந்த உற்பத்தியாளர்கள் தற்போது பால் கொள்முதல் இல்லாததால், கலப்பு தீவனங்களை வாங்கமுடியாமல் மாடுகளை வதைப்படுத்தி வருகின்றனர். பால் கறப்பதை தற்காலிகமாக குறைக்கும் நோக்கில் விவசாயிகள் மேற்கொள்ளும் இந்த உணவு கட்டுப்படுத்தும் நடவடிக்கையால், மாடுகள் சினை உருவாகும் சதவீதம் மற்றும் கன்று ஈனும் இடைவெளி அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், மாடுகளின் உடல் எடைக்கு தகுந்தாற்போல் கலப்பு தீவனங்களை வழங்கினால் தான் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து மாடுகள் நீண்ட நாள் உயிர் வாழும் என கால்நடை மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

**சந்தையில் மாடுகள்விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,02:15 IST

ஈரோடு: ஈரோடு மாட்டு சந்தையில் மாடுகளின் விற்பனை அதிகரித்தது.ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை கூடுகிறது. 1,000க்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன் சுற்றவட்டாரப் பகுதியான சிவகிரி, மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகள் விற்பனைக்காக விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர்.

ஈரோடு மாட்டு சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது:ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் மாடுகளை அதிகளவில் வாங்கிச் சென்றுள்ளனர். மாடு விற்பனை நன்றாக இருந்தது. 450 சிந்து மாடுகளும், 300 எருமை மாடுகளும் விற்பனைக்காக வியாபாரிகள் கொண்டு வந்தனர். சிந்து இன மாடுகள் 12 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 14 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது.இவ்வாறு அவர் கூறினார்.

**ஈரோடு மேட்டுக்கடையில்விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2011,02:13 IST

ஈரோடு: ஈரோடு மேட்டுகடையில் பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி ஆர்ப்பாட்டம் நடந்தது.கொ.மு.க., தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் சின்னசாமி முன்னிலை வகித்தார். பேரவை தலைவர் கோவிந்தராஜ், தமிழக விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் காசியண்ணன், ஒன்றிய அமைப்பாளர்கள் முருகேசன், பூபதி உட்பட பலர் பங்கேற்றனர். கறவை மாடுகளுடன் பெருந்துறை சாலையில் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டதால், ஈரோடு டவுன் டி.எஸ்.பி., சுரேஷ்குமார் தலைமையில் போலீஸார் குவிக்கப்பட்டனர். மறியல் செய்ய கறவை மாடுகளுடன் தயாராக இருந்த கொ.மு.க.,வினரிடம், டி.எஸ்.பி., சுரேஷ்குமார் மறியல் செய்தால், 15 நாள் "ரிமாண்ட்' செய்துவிடுவோம்; ஆகவே, சாலை ஓரத்தில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தலாம் என்றார். இதையடுத்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**மூலிகை பொருள் தயாரிப்பு பயிற்சி கடலூரில் 16ம் தேதி துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:52 IST

கடலூர் : கடலூரில் மூலிகை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 16ம் தேதி முதல் துவங்குகிறது. மத்திய அரசின் கதர் கிராமத் தொழில்கள் ஆணைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரவி வெளியிட்டுள்ள அறிக்கை:
மத்திய அரசின் கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் சார்பில் கடலூர் மஞ்சக்குப்பம் தி சுசான்லி அக்குபஞ்சர் ஆயுர்வேதிக் மருத்துவமனையில் வரும் 16ம் தேதி முதல் 20ம் தேதி வரை மூலிகை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் 30 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இப்பயிற்சியில் மூலிகைகள் என்றால் என்ன, மூலிகை மருந்துகளை தயாரிப்பது எப்படி மற்றும் கூந்தலுக்கு மூலிகை தைலம், ஹெர்பல், ஹேர்டை, பெண்களின் பிரத்யேக பிரச்னைகளுக்கான மூலிகைகள் எவை என்பது உட்பட 100க்கும் மேற்பட்ட நோய்களுக்கான மருந்துகள் பற்றியும், சில குறிப்பிட்ட மருந்துகளை நேரிடையாக செய்து காண்பித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சர்க்கரை நோய், இருதய நோய் ஆகியவற்றிற்கு மருந்துகள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படும். வங்கிகள் மூலமாக மானியத்துடன் கடனுதவி பெற்று மூலிகை தொழில் துவங்குவது எப்படி என்பது குறித்தும் அதிகாரிகள் விளக்கம் அளிக்கின்றனர். பயிற்சியை முடிப்பவர்களுக்கு மத்திய அரசின் "ஹெர்பல் புராடக்ட் மேக்கிங்' சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி கட்டணம் மற்றும் முன்பதிவுக்கு 97505-86267, 93676-22255 ஆகிய மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளலாம். முன்பதிவு செய்பவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**நெல்லுக்கு கூடுதல் விலை கிடைக்க வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,00:46 IST

சிதம்பரம் : நெல் அறுவடை பின் செய் நேர்த்தி முறைகளை கடை பிடித்து நெல்லுக்கு கூடுதல் விலை பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் அறிவுரை கூறியுள்ளனர். வேளாண்மை துணை இயக்குநர் தனவேல், வேளாண்மை அலுவலர் சித்ரா வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: சிதம்பரம் கோட்டத்தில் பரங்கிப்பேட்டை, புவனகிரி, கீரப்பாளையம், குமராட்சி, காட்டுமன்னார்கோவில் ஆகிய வட்டாரங்களில் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. விவசாயிகள் அறுவடை பின்செய் நேர்த்தி முறைகளை கடைபிடித்தால் நெல்லுக்கு கூடுதல் விலை கிடைக்கும். நெல் மணிகள் அரவையில் 62 சதவீதம் முழு அரிசி கிடைத்திட நெல் கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறிய பின் அறுவடை மேற்கொள்ள வேண்டும். அறுவடையின் போது உள்ள ஈரப்பதம் 23 சதவீதம் காய வைத்து பின் 12 சதவீதத்திற்குள்

இருக்குமாறு காய வைக்க வேண்டும். நெல்லை சுத்தமான கோணிப் பைகளில் நிரப்பி தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மீது மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். மூட்டைகளை சுவற்றில் இருந்து ஒருஅடி இடைவெளிவிட்டு அடுக்கி வைத்தால் சுவற்றின் ஈரப்பதம் நெல்லை தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி தாக்காமல் இருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி என்ற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**உளுந்தை "ஸ்டாக்' வைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:45 IST

தியாகதுருகம் : உளுந்திற்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததால் வீட்டிலேயே "ஸ்டாக்' வைக்க விவசாயிகள் பலர் முடிவு செய்துள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி உளுந்து சாகுபடி செய்துள்ளனர். குறைந்த மழையால் செடிகள் நன்கு வளர்ந்து உளுந்து மகசூல் அமோகமாக இருந்தது. கடந்த சில வாரங்களாக உளுந்து அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் சீசன் நேரங் களில் தினமும் 1,000 மூட்டைகள் கமிட்டிக்கு விற்பனைக்கு வரும். இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைத்தும் 750 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வருகின்றன. விளைபயிர்களின் மகசூல் அதிகரித்தால் விலை வீழ்ச்சி ஏற்படுவது வழக்கம். ஆனால் அத்தியாவசிய பொருட்களின் விலை உச்சத்தில் இருப்பதால் உளுந்து விலை 5,000 ரூபாயை தாண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆட்கள் பற்றாக்குறையால் அறுவடை கூலியும் கூடுதலாக வழங்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. கடந்த வாரம் அதிகபட்சமாக ஒரு மூட்டை உளுந்து 4,683 ரூபாய் விற்றது. எதிர் பார்த்த விலை கிடைக்காததால் விலை உயரும் போது விற்பனை செய்ய வீட்டிலேயே "ஸ்டாக்' வைக்க முடிவு செய்துள்ளனர். இதனால் வாரத்தின் கடைசி கிழமைகளில் உளுந்து மூட்டைவிற்பனைக்காக கமிட்டிக்கு வருவது வெகுவாக குறைந்துள்ளது.

**சென்னை வேளாண் இயக்குனர் திண்டிவனம் உழவர் சந்தையில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:42 IST

விழுப்புரம் : திண்டிவனம் உழவர் சந்தையை சென்னை வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இயக்குனர் விவேகானந்தன் பார்வையிட்டார். திண்டிவனம் உழவர் சந்தையை பார்வையிட்ட வேளாண் வணிகத்துறை இயக்குனர் விவேகானந்தன் விவசாயிகளுடன் கலந் துரையாடினார். கூட்டேரிப்பட்டு வேளாண் வணிக மையத்தை பார்வையிட்டு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். வேளாண் வணிக மையத்தில் உள்ள வசதிகள் பற்றியும், தொடுதிரை வசதி, உலர் களம் வசதி, சேமிப்பு குடோன் வசதி, வேளாண் கருவிகள் பயன்பாடு, மூன்று சக்கர ஆட்டோ வசதி பற்றியும் ஆய்வு செய்தார். திண்டிவனத்தில் உள்ள மார்க்கெட் கமிட்டி விற்பனை கூடத்தில் நடந்த ஆய்வின் போது வேளாண் இணை இயக்குனர்கள் சுதாகர், வேலாயுதம், மணி, விழுப்புரம் வேளாண் வணிகத்துறை இயக்குனர் தனவேல், மார்க்கெட் கமிட்டி செயலாளர் சண்முகம், மரக்காணம் தோட்டக் கலை உதவி இயக்குனர் சண்முகம், வேளாண்மை அலுவலர் (உழவர் சந்தை) பெரியசாமி, வேளாண் வணிக அலுவலர் கருணாநிதி உடனிருந்தனர்.

**அரிசி விலை குறைவு: பொதுமக்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,23:58 IST

தர்மபுரி: தர்மபுரிக்கு அண்டை மாநிலங்களில் இருந்து அரிசி வரத்து அதிகரித்துள்ளது. அதனால், மாவட்டத்தில் அரிசி விலை குறையத்துவங்கியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்திருந்தது. அதனால், கர்நாடக, ஆந்திரா மாநிலங்களிலிருந்து அதிக அளவு அரிசி மூட்டைகள், தமிழகத்துக்கு வரத் துவங்கியுள்ளன. கர்நாடக, ஆந்திரா எல்லையில் உள்ள தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு அதிக அரிசி மூட்டைகள் விற்பனைக்கு வந்துள்ளன. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 45 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை நெல் அறுவடை துவங்கியுள்ளது. இரு மாவட்டத்திலும் அரசின் நெல் கொள்முதல் நேரடி மையங்கள் இல்லை. ஆனால், தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவிலான நெல் அரவை நிலையங்கள் உள்ளதால், அரவை செய்த அரிசி நேரடியாக மார்க்கெட்டுக்கு வருகிறது. மாவட்டத்தில் போதிய அரிசி வரத்து இருப்பதாலும், அண்டை மாநிலங்களிலிருந்து விற்பனைக்கு அரிசி மூட்டைகள் வருவதாலும், இவ்விரு மாவட்டத்திலும் அரிசி விலை குறையத்துவங்கியுள்ளது. ஜனவரி மாத அறுவடைக்கு பின், அரிசி விலை குறையும். தற்போது, ஏற்றுமதி தடை விதிப்பாலும், உள் மாநில நெல் உற்பத்தி அதிகமானதாலும், அரிசி விலை கடந்த வாரத்திலிருந்து பரவலாக குறையத்துவங்கியுள்ளது. அதிசய பொன்னி கடந்த வாரம் கிலோ, 26லிருந்து 22 ரூபாயாகவும், பிபிடி பொன்னி 28லிருந்து 23 ரூபாயாகவும் குறைந்துள்ளது. பொன்மணி அரிசி கிலோ, 22லிருந்து 20 ரூபாயாக குறைந்துள்ளது. ஒட்டு மொத்தமாக, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அரிசி விலை

இரண்டு ரூபாயிலிருந்து மூன்று ரூபாய் வரை குறைந்துள்ளது. அனைத்து அரிசி ரகங்களின் விலையும் குறைந்துள்ளதால், மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து தர்மபுரியை சேர்ந்த பழனிவேல்ராஜன் கூறுகையில், ""அண்டை மாநிலத்திலிருந்து தினமும் 10க்கும் மேற்பட்ட லாரிகளில் தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மார்க்கெட்டுக்கு அரிசி மூட்டைகள் வருகின்றன. அதனால், விலை குறைவு ஏற்பட்டுள்ளது. கர்நாடகம் மற்றும் ஆந்திராவில் நெல் சாகுபடிக்கு அதிக ரசாயனம் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்துகின்றனர். உள்ளூர் உற்பத்தி அதிகமானால், மேலும் அரிசி விலை மேலும் குறையும்," என்றார்.

**சூரியகாந்தி சாகுபடி பரப்பு குறைகிறது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,01:03 IST

வெள்ளகோவில்: நோய் தாக்கம் அதிகரிப்பு, ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால், வெள்ளகோவிலில் சூரியகாந்தி பரப்பு மிகவும் குறைந்து விட்டது.
மரவள்ளி கிழங்கு, மக்காச்சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் வெள்ளகோவில் பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்றன. விவசாயிகள், சூரியகாந்தி சாகுபடியை கைவிட்டு விட்டனர். இதற்கு ஆட்கள் பற்றாக்குறையும், நோய் தாக்கமுமே காரணம். லாபம் கருதி சுழற்சி முறையை பின்பற்றாமல் தொடர்ந்து சூரியகாந்தி பயிரிட்டதால் மண் வளம் குறைந்து விட்டது; தற்போது எதிர்பார்த்த மகசூல் பெற முடிவதில்லை என்கிறது, வேளாண் துறை.
விவசாயிகள் கூறியதாவது:
வெள்ளகோவில் வட்டாரத்தில் 2005-07 வரை சூரியகாந்தி அதிகளவு பயிர் செய்யப்பட்டிருந்தது. வெள்ளகோவில் பகுதிகளில் எங்கு பார்த்தாலும், சூரியகாந்தியை காண முடிந்தது. மற்ற பயிர்களை போல் இல்லாமல், தினமும் கவனித்து வந்தால் மட்டுமே சூரியகாந்தியில் மகசூல் அதிகம் பெற முடியும். விவசாய கூலித்தொழிலில் ஈடுபட்ட பலர், தற்போது 100 நாள் வேலைத்திட்டத்தில் பணியாற்ற ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், வெள்ளகோவிலில் விவசாயத்துக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை.
நோய் தாக்கம், மகசூல் பாதிப்பு, விலை குறைவு போன்ற காரணங்களால் சூரியகாந்தி சாகுபடி விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். சிறிது சிறிதாக சூரியகாந்தி சாகுபடி செய்வதை நிறுத்தி விட்டு, மரவள்ளி, மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர், என்றனர்.
வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: வெள்ளகோவில் பகுதிகளில் நான்கு ஆண்டுகளுக்கு முன் வரை 4,000 ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்பட்டிருந்தது. பெரும்பாலான விவசாயிகள், ஒட்டு ரகத்தை அதிகளவு சாகுபடி செய்திருந்தனர். ஆரம்பத்தில் பயிர் செய்தபோது,

சூரியகாந்தியில் அதிகளவு மகசூல் பெற முடிந்த விவசாயிகளால், அடுத்தடுத்த காலகட்டத்தில் மகசூல் பெற முடியவில்லை. மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்ததால், சுழற்சி முறையில் விவசாயத்தை பின்பற்றாமல், தொடர்ந்து சூரியகாந்தி பயிரிட்டு வந்தனர். ஆண்டுக்கு இரண்டு மூன்று முறை தொடர்ந்து ஒரே பயிரை சாகுபடி செய்ததால், மண்ணில் உள்ள சத்துக்கள் உறிஞ்சப்பட்டு, ஆரம்பத்தில் இருந்த மகசூலை பெற முடியாத நிலை ஏற்பட்டது.
சுழற்சி முறை விவசாயத்தை கடைபிடித்து, ஒருங்கிணைந்த விவசாயத்தை மேற்கொண்டால், சூரியகாந்தி விவசாயத்தில் நல்ல மகசூல் பெறலாம், என்றனர்.

**மல்பெரி, பட்டுக்கூடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,01:01 IST

ஈரோடு: சித்தோடு பகுதியில் மல்பெரி மற்றும் பட்டுக்கூடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.
விவசாயிகளிடம், மல்பெரி வளர்ப்பை ஊக்குவிக்க பட்டு வளர்ச்சித்துறை சார்பில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சித்தோடு, சி.மேட்டுப்பாளையம், பள்ளபாளையம், நொச்சிபாளையம் பகுதியில் 25 ஏக்கர் பரப்பளவில் மல்பெரி பயிரிடப்பட்டுள்ளது.
சி.மேட்டுப்பாளையத்தை சேர்ந்த விவசாயி மாரப்பன் கூறியதாவது: என்னுடைய இரண்டரை ஏக்கர் பரப்பளவில் பல ஆண்டாக கரும்பு பயிரிட்டு வந்தேன். மூன்று ஆண்டாக மல்பெரி வளர்த்து வருகிறேன். சரியான முறையில் பராமரித்து வந்தால் அதிகளவு லாபம் கிடைக்கும். இளம்புழு வளர்ப்பு மையத்தில் இருந்து ஏழு நாளில் வளர்க்கப்பட்ட புழுக்களை விலைக்கு வாங்குகிறோம். அவற்றை, இங்குள்ள ஷெட்டில் வளர்க்கிறோம். ஐந்து நாட்களுக்கு ஒரு முறை மல்பெரி செடி இலைகளை அறுத்து, புழுக்களுக்கு உணவாக போடுகிறோம். இலைகளை தொடர்ந்து 17 நாட்கள்ள் புழுக்கள் சாப்பிட்டு, தன்னைத்தானே சுற்றி கூடு கட்டிக் கொள்கிறது. ஒரு கூட்டின் எடை 1.8 கிராம் முதல் இரண்டு கிராம் வரை இருக்கும். இங்கு வெண்பட்டுக் கூடு தயாரிக்கப்படுகிறது. 1,500 சதுர அடி பரப்பளவில் புழுக்களை வளர்த்து வருகிறோம். வெயில், குளிர் அதிகம் தாக்காமல் பக்குவமாக புழுக்களை வளர்த்து வந்தால், பட்டுக்கூடு அதிகளவு கிடைக்கும். மல்பெரி செடிகளுக்கு தொழு உரம், இயற்கை உரம் இடுவதால் நல்ல முறையில் வளர்கிறது. ஒரு தொகுதி இளம்புழுக்களை 12 ரூபாய்க்கு வாங்குகிறோம். எங்கள் மையத்தில் 90 ஆயிரம் புழுக்கள் 17 நாளில் 3.5 டன் மல்பெரி செடிகளை தின்று வளர்கிறது. பட்டுக் கூடுகளை கோவை, சேலம், ஒசூர் ஆகிய இடங்களில் விற்பனை செய்கிறோம். வெண் பட்டுக்கூடு கிலோ 400 ரூபாயக்கும், மஞ்சள் பட்டுக்கூடு கிலோ 310 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. மல்பெரி செடி வளர்ப்பதால் லாபம்தான்.இவ்வாறு அவர் கூறினார்.

பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் ஆதித்தன், உதவி ஆய்வாளர் ஷபீர்அகமது ஆகியோர் கூறியதாவது:

மல்பெரி செடிகளை வளர்ப்பதில் சமீப காலமாக விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏக்கருக்கு 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்ட முடியும். மல்பெரி செடி ஒரு முறை நடவு செய்தால் போதும்; அதன் மூலம் பல ஆண்டுகளுக்கு இலை பறிக்க முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பசுந்தீவனங்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:31 IST

பொங்கலூர்: பொங்கலூர் பகுதியில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பே பிரதானமாக உள்ளது. கடந்த ஆடி பட்டத்தில் மானாவாரி நிலங்களில் கொள்ளு, தட்டை, நரிப்பயிறு, கம்பு உள்ளிட்ட பசுந்தீனப் பயிர்களை விதைத்தனர். மேலும், கொளுக்கட்டை, அருகம் புல், கோரை உள்ளிட்ட புல் வகைகள் இயற்கையாகவே வளர்ந்து கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக பயன்பட்டது.தற்போது மழை காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பித்துள்ளதால், புல் வகைகள் காய்ந்து வருகின்றன. இதனால், மாடுகளுக்கு பசுந்தீனங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதை சமாளிக்க விவசாயிகள் வேலி மசால், குதிரை மசால், அகத்தி உள்பட பல நீண்ட கால பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ளனர்.இவைகளை ஒரு முறை சாகுபடி செய்தால், ஆண்டு முழுவதும் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அறுவடை செய்து கொண்டே இருக்கலாம். இவற்றில், கால்நடைகளுக்கு தேவையான கால்சியம், புரதம், வைட்டமின் உள்பட பல்வேறு சத்துக்கள் கிடைத்து விடுவதால், கால்நடைகள் ஆரோக்கியமாக வளர்கின்றன. இதனால், நீண்ட காலம் பயனளிக்கக்கூடிய பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**ஆனைமலையில் கரும்பு அறுவடை பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:30 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை சுற்றுப்பகுதிகளில், கரும்பு அறுவடை துவங்கியுள்ளதால் சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்காக கரும்பு அனுப்பும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. பொள்ளாச்சி தாலுகாவில், அம்பராம்பாளையம், சுப்பேகவுண்டன்புதூர், ஆனைமலை சுற்றுப்பகுதியில் கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் கரும்பில், மூன்றில் ஒரு பங்கு வெல்லம் உற்பத்திக்காகவும், சந்தைக்கு விற்பனைக்காவும்

அனுப்பப்படுகிறது. மீதமுள்ள இரண்டு பங்கு கரும்பு சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்காக அனுப்பப்படுகிறது. அம்பராம்பாளையம், ஆனைமலை அடுத்த சுப்பேக்கவுண்டன்புதூர், தாத்தூர் பகுதிகளில், தற்போது கரும்பு அறுவடை நடந்து வருகிறது. இதை நேரடியாக கொள்முதல் செய்ய சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் ஆனைமலை பகுதியில் முகாமிட்டுள்ளனர்.
அம்பராம்பாளையம் பகுதி கரும்பு விவசாயிகள் கூறியதாவது: பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை பகுதியில் 200 ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக நாட்களாக கரும்பு அறுவடை நடந்து வருகிறது. இங்கிருந்து, அமராவதி சர்க்கரை ஆலைக்கு அரவைக்காக கரும்பு அனுப்பப்படுகிறது. உடுமலை பகுதிக்கு, பொள்ளாச்சியிலிருந்து ஐந்து முதல் பத்து டன் வரை கரும்பு அனுப்பப்படுகிறது. இதுதவிர, வெல்ல உற்பத்தியாளர்களும், இங்கிருந்து நேரடியாக கரும்பு வாங்கி செல்கின்றனர். கரும்பு அறுவடை செய்ய உள்ளூரில் கூலியாட்கள் கிடைக்காததால், அசாம், ஒரிசா உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்து கூலியாட்கள் அழைத்து வந்து அறுவடை மேற்கொள்ளப்படுகிறது. இதனால், கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு குறைந்த பரப்பில் மட்டுமே கரும்பு பயிரிடப்பட்டிருந்தது. அதற்கேற்ப விளைச்சல் கிடைத்துள்ளது. இன்னும், நான்கு மாதங்களுக்கு கரும்பு சீசன் உள்ளது. இதனால், கரும்புக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது, ஒரு ஜோடி கரும்பு 40 ரூபாய் வரையிலும் விற்பனையாகிறது என்றனர்.

**தேங்காய் மட்டையின் கொள்முதல் விலை உயர்வு:தட்டுப்பாட்டால் தவிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:47 IST

உடுமலை: உடுமலை பகுதியில் கார்பன் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகரித்துள்ளதால், கொப்பரை உற்பத்தியில் வீணாக எறியப்பட்டு வந்த தேங்காய் தொட்டியின் ஒரு டன் விலை 5 ஆயிரத்தை தாண்டியுள்ளது.
பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் தென்னை சாகுபடி பிரதானமாக உள்ளது. தென்னை மரத்திலிருந்து பெறப்படும் அனைத்து பொருட்களும் மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றப்படுகிறது. கொப்பரை மற்றும் இதர பயன்பாட்டிற்காக தேங்காய் உரிக்கும் போது வீணாகும் மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கப்படுகிறது. நார் தொழிற்சாலைகள் கடந்த சில ஆண்டுகளில் பல மடங்கு அதிகரித்துள்ளன. இந்நிலையில், கொப்பரை உற்பத்தியின் போது தேங்காயிலிருந்து பருப்பை பிரித்தெடுத்த பின் வீணாகும் தேங்காய் தொட்டிகள் வீடுகளிலுள்ள அடுப்புகளில் தீ எரித்தல் போன்றவைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது.கடந்த சில ஆண்டுகளுக்கு முன் காங்கேயம் பகுதியில் கொப்பரை உற்பத்தியின் போது வீணாகும் தேங்காய் தொட்டிகளை எரித்து கார்பன் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உருவாயின. தற்போது, இவ்வகை

தொழிற்சாலைகள் உடுமலை பகுதியிலும் அதிகரித்துள்ளன. தேங்காய் தொட்டிகளை குறிப்பிட்ட வெப்பத்தில் எரித்து, பின்னர் குளிர்வூட்டி கருப்பு நிற கார்பன் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த கார்பன் பல்வேறு பயன்பாட்டிற்காக கேரளா போன்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கார்பன் தயாரிக்கும் தொழிற்சாலைகள் துவங்கும் போது கொப்பரை களங்களிலிருந்து ஒரு டன் தேங்காய் மட்டை 800 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. கார்பன் தொழிற்சாலைகள் பல மடங்கு அதிகரித்து, உற்பத்தி உயர்ந்துள்ளதால் தேங்காய் மட்டைகளுக்கு கிராக்கி ஏற்பட்டது. வடகிழக்கு பருவமழையால் கடந்த சில மாதங்களாக கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டு, கார்பன் தொழிற்சாலைகளுக்கு தேவையான தேங்காய் மட்டைகள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், கொள்முதல் விலை அதிகரித்தது. தற்போது, ஒரு டன் தேங்காய் மட்டை 5 ஆயிரத்து 500 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பல்வேறு காரணங்களால் தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உற்பத்திக்கான தேங்காய் மட்டைகள் கிடைக்காமல் கார்பன் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிற மாவட்டங்களிலிருந்து மட்டைகளை கொள்முதல் செய்து உற்பத்தி பாதிப்பை தடுக்க உற்பத்தியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

**பாகற்காய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:43 IST

திருப்பூர்: தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பாகற்காய் விலை நேற்று அதிகரித்திருந்தது; ஒரு சிப்பம் 200 ரூபாய்க்கு விற்பனையானது. பல்லடம், புளியம் பட்டி, காரணம்பேட்டை, பொங்கலூர், மேட்டுக் கடை, லட்சுமி மில், செம்மிபாளையம், சூலூர், திருப்பூர், அவிநாசி உள் ளிட்ட பகுதிகளில் இருந்து தென்னம்பாளையம் மார்க் கெட்டுக்கு பாகற்காய் விற்பனைக்கு வருகிறது. கடந்த வாரம் 18 கிலோ கொண்ட சிப்பம் 120 முதல் 150 ரூபாய் வரை விற்கப் பட்டது; நேற்று விலை உயர்ந்து 200 ரூபாய்க்கு விற்பனையானது. ஆறு மாத பயிரான பாகற்காய், தற்போது பறிப்பு முடியும் தருவாயில் இருப்பதால், வரத்து குறைந்து கொண்டே வருகிறது. அதனால், விலை உயர்ந்து கொண்டே வருகிறது. வரும் நாட்களில் பறிப்பு முற்றிலும் நிறுத் தப்படும் போது, விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**பீட்ரூட் வரத்து அதிகரிப்பு விலை குறைவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:40 IST

திருப்பூர்: திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பீட்ரூட் வரத்து அதிகரித்து வருவதால், தென்னம் பாளையம் மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது. போதிய விலை இல்லாததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்லடம், சுல்தான்பேட்டை, மந்திரிபாளையம், கேத்தனூர், பொங்கலூர், புளியமரத்துபாளையம், போகம்பட்டி, சித்தநாயக்கன் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பீட்ரூட் வரத்து அதிகரித்து வருகிறது.கடந்த வாரம், தினமும் 50 முதல் 100 சிப்பம் வரை மட்டுமே பீட்ரூட் வரத்து இருந்தது. விலையும் மிகவும் அதிகமாக இருந்தது. இந்த வாரம் தினமும் 300 முதல் 500 சிப்பம் வரை வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது. கடந்த வாரம், 30 கிலோ கொண்ட சிப்பம் 550 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று, 250 ரூபாய் குறைந்து 300 ரூபாய்க்கு விற்பனையானது. சில்லறையில் 18ல் இருந்து 10 ரூபாயாக இறங்கியது.பீட்ரூட்டை கடந்த டிச., மாதம் பயிரிட்ட விவசாயிகள், தற்போது அறுவடை செய்து வருகின்றனர். ஒரே நேரத்தில் அனைத்து பகுதி விவசாயிகளும் அறுவடை செய்வதால் வரத்து அதிகரித்து கொண்டே வருகிறது. இன்னும் ஒரு வாரத்தில், பீட்ரூட் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தர்பூசணி வரத்து ஆரம்பம்:விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:40 IST

திருப்பூர்: கோடை வெயிலை தணிக்கும் தர்பூசணி வரத்து ஆரம்பித்துள்ளது. திருப்பூர், தென்னம் பாளையம் மார்க்கெட், நகரில் ஆங்காங்கே கடைகள் முளைத்துவருகின்றன.திருப்பூர் மார்க்கெட்டுக்கு குண்டடம், தாராபுரம், பொள்ளாச்சி, கண்டியன்கோவில், சூரியநல்லூர் ஆகிய பகுதிகளின் சுற்றுவட்டாரத்தில் இருந்து வரத்து துவங்கியுள்ளது. மாயாவரம், திண்டிவனம், கும்பகோணம், பண்ருட்டி, திருச்சி, கள்ளக்குறிச்சி, ஆத்தூர், பெங்களூரு போன்ற பகுதிகளில் விளைச்சல் அதிகமாக இருக்கும். பெங்களூரு தர்பூசணிக்கு மவுசு அதிகம் என்பதால் விலையும் அதிகமாக இருக்கும். விவசாயிகள் கூறியதாவது:இறுக்கமான மண் பகுதியில் வளராது; மணல் காட்டில் தர்பூசணி செடி செழித்து வளரும். மூன்று மாத கொடி பயிர் என்பதால் விவசாயிகள் குறுகிய காலத்தில் மகசூல் ஈட்ட முடியும். ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெற முடியும் என்பதால், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.எப்போதும் மிதமான ஈரப்பதம் இருக்க வேண்டும் என்பதால் வாரத்துக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். அதிக உப்பு இல்லாத நல்ல தண்ணீரில் சாகுபடி செய்தால், பழம் நல்ல ருசியாக இருக்கும். பனிப்பொழிவு காலங்களில் தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை.கோழிப்பண்ணை கழிவுகள் மற்றும் மாட்டு சாணத்தை உரமாக இடலாம். வெயில் காலங்களில் நாவல் பூச்சியும், மழைக்காலங்களில் அஸ்வினி பூச்சியும் தாக்காமல் கவனித்தால் அதிக விளைச்சலை கொடுக்கும். நல்ல விதையில் நடவு நட்டிருந்தால்,

ஏக்கருக்கு மூன்று டன் முதல் எட்டு டன் வரை விளைச்சல் கிடைக்கும். கடந்த வாரம் முதல் சாகுபடி தர்பூசணி பழங்கள் வரத்து ஆரம்பித்துள்ளன. கிலோ ஐந்து முதல் ஆறு ரூபாய் மற்றும் காயின் பருமனை பொருத்து ஐந்து ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது.தர்பூசணி வியாபாரி ஒருவர் கூறுகையில், "தற்போது, திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வரத்து துவங்கியுள்ளது. வரும் நாட்களில் வெளிமாவட்ட காய்களின் வரத்து அதிகமாகும்போது விலை குறையும். வெயில் காலங்களில் மக்கள் விரும்பி சாப்பிடுவதால் விற்பனை சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கிறோம்,' என்றார்.

**கால்நடைக்கு சரிவிகித தீவனம் வழங்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,23:53 IST

கரூர்: கால்நடைகளுக்கு சரிவிகித தீவனம் வழங்க கால்நடை பராமரிப்புத்துறையினர் அறிவித்துள்ளனர்.

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை:

பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கறவை மாடு பராமரிக்கும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளின் நலன் காக்க பால் கறக்கும் மாடுகளுக்கு சரிவிகித தீவனம் வழங்க வேண்டும். பசுக்களுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவை சரிவிகிதமாக கொடுக்க வேண்டும். அடர் தீவனம் வழங்குவதால் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், மாட்டுக்கு தேவையான புரத சத்து மற்றும் கொழுப்பு சத்து கிடைக்கும். தீவனம் குறைவதால் பால் உற்பத்தி குறைவதுடன் நீண்டகால தீமையாக பசுவின் சினைப்படும் சதவீதம் குறையும். இதனால் கன்று ஈனும் இடைவெளி அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்பு திறனும் குறையும்.

தீவனம் குறைந்து வழங்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு பெரிய அளவில் இருக்கும் என்பதால், கால்நடை விவசாயிகள் தங்கள் பசுக்களுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் சரிவிகிதமாக வழங்க வேண்டும்.

**கறவை மாடு காப்பீடு "செக்' வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,23:51 IST

குளித்தலை: கரூர் மாவட்டம், குளித்தலை சரகத்தில் உள்ள நங்கவரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கறவை மாடு கடன் பெற்று, இப்கோ, டோக்கியோ காப்பீட்டு

நிறுவனத்தில் கறவை மாடு காப்பீடு செய்யப்பட்டது. கடன் பெற்றவர்களுக்கு கறவை மாடு இறந்துவிட்டால் அவர்களுக்கு இப்கோ, டோக்கியோ காப்பீட்டு நிறுவனம் மூலம் கிடைக்க வேண்டிய காப்பீட்டுத் தொகை 15 ஆயிரம் ரூபாய் காசோலை வழங்கப்பட்டது. இதனை கரூர் மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ஹேமா பயனாளிகளுக்கு வழங்கினார். துணைப்பதிவாளர் சுப்பிரமணியன், குளித்தலை சரக துணைப்பதிவாளர் சிவசாமி, இப்கோ, டோக்கியோ காப்பீடு நிறுவன திருச்சி கிளை மேலாளர் சரவணன், ஏஜென்ஸி மேலாளர் தீனதயாளன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**மழையால் சம்பா சாகுபடி பெரும் ஏமாற்றம் : அறுவடையில் பாதியளவு மகசூல் இழப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,01:40 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே நாச்சியார்கோவில் பகுதியில், மழையால் ஏற்பட்ட பாதிப்பால், சம்பா சாகுபடி அறுவடையில் பாதியளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம் நாச்சியார்கோவில் அருகே மாத்தூர் பகுதியில், 300 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இங்கு, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் சம்பா பயிர் சாகுபடி செய்தனர்.வயல்களில் ஆடுதுறை, 38 மற்றும், 1,050 நெல் ரகங்களை பயிர் செய்திருந்தனர். அறுவடையின்போது ஏக்கருக்கு, 30 மூட்டை நெல் கிடைப்பது வழக்கம்.

சமீபத்தில் பெய்த மழையின்போது, சம்பா பயிரிட்டிருந்த வயல்களில் பூச்சித் தாக்கப்பட்டு, நெற்பயிர்கள் பாதிக்குமேல் பதர்களாக (கருக்கா) மாறின. இதனால், சம்பா அறுவடையின்போது ஏக்கருக்கு, 10 முதல், 12 மூட்டைகள் வரை, தான் நெல் கிடைத்தது.பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்துக்காக வங்கிகளிலும், தனியாரிடமும், கடன் பெற்று தான் பயிரிடுகின்றனர். இந்த கடன் அனைத்தும் சம்பா அறுவடை முடிந்ததும் நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையங்களில் போட்டு விட்டு பணம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என காத்திருந்தனர்.

ஆனால், ஏக்கருக்கு, 10 மூட்டை மட்டும் நெல் அறுவடை செய்துள்ள நிலையில், பயிரிட வாங்கிய கடனை கொடுப்பதற்கே இந்தப் பணம் போதுமானதாக இருக்காது என்று விவசாயிகள் புலம்புகின்றனர்.டெல்டா மாவட்டத்தில் சம்பா, தாளடி போன்ற அறுவடை நேரங்களில் மட்டும் தான் விவசாயிகள் குடும்பத்தினர் பண்டிகை வருவது போல் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருப்பர். அதுவும் இயற்கை இடர்பாடான மழையால் பாதிக்கப்பட்டு விடுகிறது.

"டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடியில் பெருத்த கடன் சுமை ஏற்பட்டு தவிக்கும்

விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரணத்தொகை வழங்கி காப்பாற்ற வேண்டும்' என, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மானிய விலையில் விவசாய இடுபொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,23:43 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் யூனியனை சேர்ந்த தகட்டூர் சுப்பிரமணியன்காடு துவக்கப்பள்ளியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானிய விலையில் விவசாய இடுபொருள் வழங்கும் விழா நடந்தது.
மாவட்ட கவுன்சிலர் ஆனந்தராஜ், பஞ்சாயத்து தலைவர் அமிர்தகடேஸ்வரன், பத்மாவதி ஜெகநாதன், யூனியன் கவுன்சிலர் கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் மணிகண்டன் வரவேற்றார். நாகை கலெக்டர் முனியநாதன் மானிய விலையில் விவசாய இடுபொருட்களை வழங்க பேசினார். பேராசிரியர் தங்கதாமோதரன், விவசாயத்துறை அதிகாரிகள் முருகானந்தம், ராஜேந்திரன், மயில்வாகணன், மணிகண்டபிரசன்னா, விஜயகுமார் ஆகியோர் விவசாயம் தொழில்நுட்பம் குறித்து விளக்கி பேசினர். விவசாயிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர். விவசாய உதவி அலுவலர் ரவி நன்றி கூறினார்.

**ஆவினில் பால் உற்பத்தி குறைவால்கூடுதல் விலைக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,23:38 IST

புதூர்: ஆவினில் பால் பற்றாக்குறையால் அதிகாரிகள் காட்டில் மழை பெய்வதாக பூத் ஏஜன்டுகள் கூறுகின்றனர். அதே நேரத்தில் கார்டு வைத்திருப்பவர்களுக்கும் ஏஜன்டுகள் கூடுதல் விலையில் பால் விற்பதால் வாடிக்கையாளர்கள் அதிருப்தியில் உள்ளனர். பால் கொள்முதலுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்ய கோரி பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் செய்து வருகின்றனர். இதனால் ஆவினில் பால் உற்பத்தி குறைந்துள்ளது. உற்பத்தி குறைவால் வாடிக்கையாளர்களுக்கு முறையாக பால் சப்ளை செய்ய முடியவில்லை. புதூர் பகுதியில் கடந்த வாரம் வரை சப்ளையில் பாதியாக குறைத்த ஆவின் நிர்வாகம் தற்போது மிகக் குறைந்த அளவில் சப்ளை செய்கிறது. பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பூத் ஏஜன்டுகளே கூடுதல் விலைக்கு விற்கின்றனர். இதனால் வாடிக்கையாளர்களுக்கும், ஏஜன்டுகளுக்குமிடையே தகராறு ஏற்படுகிறது. பூத் ஏஜண்டுகள் கூறுகையில், ""ஆவினில் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. வாடிக்கையாளர்களுக்கு பால் வழங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். சப்ளை செய்பவர்கள்எங்களிடம் அரை லிட்டர்

பாக்கெட் 12 ரூபாய்க்கு விற்கின்றனர். காரணம் கேட்டால், ஒரு லோடுக்கு 300 முதல் 500 ரூபாய் வரை அதிகாரிகளுக்கு கப்பம் கொடுக்க வேண்டி உள்ளது என்கின்றனர்.

இதனால் மாத அட்டை வைத்திருப்பவர்களுக்கும் கூடுதல் விலைக்கு பால் விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்," என்றனர். வாடிக்கையாளர்கள் கூறுகையில், ""ஆவின் பூத்தில் அரை லிட்டர் பால் 13 ரூபாய் வரை விற்கின்றனர். கேட்டால் யாரிடம் வேண்டுமானாலும் புகார் கூறுங்கள் என அதிகாரிகள் போன் எண்ணை கொடுக்கின்றனர். அவர்களிடம் புகார் கூறினால் பதிலே சொல்லாமல் போனை துண்டித்து விடுகின்றனர். இதே நிலை நீடித்தால் குழந்தைகளுக்குக் கூட பால் இல்லாத நிலை ஏற்படும்," என்றனர்.

### ஸ்ரீவி.,யில் பருத்தி சாகுபடி செய்யும் பரப்பளவுஅதிகரிப்பு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:38 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:அதிக விலை கிடைப்பதால் மாசிபட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அதிக பரப்பளவில் பருத்தி நடவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.ஸ்ரீவி.,யில் கடந்த ஓராண்டாக சரி வர மழை இல்லை. இதனால் கடந்தாண்டு 500 எக்டேருக்கும் குறைவாகவே பருத்தி விவசாயம் நடந்தது. மேலும் கடந்தாண்டு ஒரு குவிண்டால் பருத்திக்கு 3,200 ரூபாய் தான் கிடைத்தது. அக்டோபர், நவம்பரில் பெய்த மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணறுகளில் தண்ணீர் உள்ளது. கண்மாய்களிலும் ஓரளவு தண்ணீர் இருக்கிறது. மேலும், இந்தாண்டு பருத்திக்கு, குவிண்டாலுக்கு 5,500 ரூபாய் கிடைக்கிறது. இதனால் மம்சாபுரம், திருவண்ணாமலை, இடையன்குளம் பகுதியில் நெல் நடவு செய்தவர்கள் அறுவடை செய்து கோடைக்கு பருத்தி நடவு செய்து வருகின்றனர். கிணற்று பாசன பகுதிகளான பூவாணி, விழுப்பனூர், மானகசேரி, நுள்ளிக்குளம் பகுதியில், "எஸ்.வி.ஆர்.2. பன்னி, சுப்பிரியா' ஆகிய பருத்தி விதைகளை நடவு செய்து வருகின்றனர்.

விவசாயி ராஜகோபால் கூறியதாவது: கடந்தாண்டு கிணற்றில் தண்ணீர் இல்லாததால் விவசாயம் செய்யவில்லை. இந்தாண்டு கிணற்றில் தண்ணீர் இருக்கிறது. பருத்திக்கு எப்போதும் இல்லாத அளவு இந்தாண்டு விலை கிடைக்கிறது. இதனால் 5 ஏக்கரில் பருத்தி நடவு செய்துள்ளேன், என்றார்.வேளாண் உதவி இயக்குனர் முத்து முனியாண்டி கூறியதாவது: இந்தாண்டு பருத்திக்கு அதிக விலை கிடைப்பதால் கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு பருத்தி சாகுபடி 1,200 எக்டேராக அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கு தேவையான எஸ்.வி.பி.ஆர்.2 பருத்தி விதை கிலோவிற்கு 65 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது, என்றார்.

**கொள்முதல்நிலையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:43 IST

சேத்தூர்:சேத்தூர்,தேவதானம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் நெல் அறுவடை நடந்து வருகிறது. சன்னரக நெல் மூடை ஒன்றுக்கு 720 ரூபாய், பெரிய ரக நெல் 700 ரூபாய்க்கும் வாங்கினர். இதனால் விவசாயிகள் வேதனையடைந்தனர்.சேத்தூரில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டதால் சன்ன ரக நெல் 1100 ரூபாய்,பெரிய ரக நெல் 1050க்கும் விற்பனை செய்யும் விவசாயிகள் பணத்தை உடனே பெற்று செல்கின்றனர்.

**காளையார்கோவிலில்பால் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:17 IST

காளையார்கோவில்:காளையார்கோவிலில் மாட்டு தீவன விலை உயர்வால், பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் விலை உயர்த்தி வழங்க பால் உற்பத்தியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.இங்குள்ள விவசாயிகள், உப தொழிலாக பால்மாடு வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இங்கு பால் கறப்பதின் மூலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம் நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். இவை, பருத்தி கண்மாய் பால் குளிரூட்டும் மையத்தில், சேமித்து ஆவின் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும்.உணவு பொருள் உயர்வு: தற்போது, மாடுகளுக்கு தேவையான தீவனம் விலை உயர்ந்துள்ளது. பால் கரப்பவர்கள் கூலி என பால் உற்பத்திக்கான செலவும் அதிகரித்துவிட்டது. இதனால், உற்பத்தி வெகுவாக குறைந்து வருகிறது. இதனால், நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டராக உற்பத்தி குறைந்துவிட்டது. இது குறித்து பருத்தி கண்மாய் பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர் வேதராசு கூறியது, "" சில ஆண்டுகளாக பால்மாடு, தீவனங்களின் விலை உயர்ந்துவிட்டது. ஒரு லிட்டர் பால் கொள்முதல் விலையாக அரசு 15 ரூபாய் மட்டுமே தருகிறது. ஆனால், இதற்காகும் உற்பத்தி செலவு 19 ரூபாய். பால் உற்பத்தியினால் நஷ்டம் தான் ஏற்படுகிறது," என்றார்.

**புளி விளைச்சல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,22:15 IST

மானாமதுரை:மானாமதுரை பகுதியில் பருவ மழையை தொடர்ந்து நிலவும் மிதமான தட்பவெப்பத்தால், புளி விளைச்சல் அதிகரித்துள்ளது.கோடையை தாங்கி வளரும் புளியமரத்திற்கு மிதமான வெப்பம், மிதமான ஈரப்பதம் இருந்தால் பூக்கள் அதிகம் பிடிக்கும். இதனால் காய்ப்பு திறன் அதிகமாகி மகசூல் கூடுதலாகும். இதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலையால், மரங்களில் காய்ப்பு அதிகரித்துள்ளது.திண்டுக்கல், நத்தம், ஒட்டன்சத்திரம் பகுதியிலிருந்து தான் மானாமதுரை பகுதிகளுக்கு புளி வரத்து இருக்கும். இந்தாண்டு அதிக விளைச்சல் இருப்பதால், சிறிய அளவில் விவசாய தோட்டங்கள் வைத்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வீடுகளுக்கு தேவையான புளி உள்ளூரில் கிடைப்பதால், கிராமங்களில் இவற்றின் நுகர்வு குறைந்துள்ளது.

இதுகுறித்து விவசாயி பாண்டி கூறுகையில், ""புளிய மரம் வளர்ப்பது குறைந்துவிட்டது. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் வைத்திருந்த மரங்களே இன்றும் காய்ப்பு தருகின்றன. தற்போது அனைத்து மரங்களிலும் காய்ப்பு அதிகரித்துள்ளது. இதனால் சந்தையில் நல்ல விலை கிடைக்கும் என, நம்புகிறோம்," என்றார்.

**விதை விற்பனை எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2011,21:22 IST

திண்டுக்கல்:விதை ஆய்வு துணை இயக்குனர் ரங்கராஜன் அறிக்கை: விதை உரிமை பெறாமல் விதை விற்பனை செய்தல், இருப்பு வைத்தல் குற்றமாகும்.விதை விற்பனை செய்யும் போது விவசாயிகளுக்கு ரசீது தர வேண்டும். மாதந்தோறும் விதை விற்பனை விபரத்தை துணை இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பாத நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.விதை மாதிரி: திண்டுக்கல்லில் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வாளர் குழுவால் 128 விதை மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வெண்பன்றி வளர்ப்பது எப்படி? கால்நடைப் பல்கலைகழகத்தில் பயிற்சி

கோவை, பிப்.14–
கோவையை அடுத்த சரவணம்பட்டியில் உள்ள கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெண்பன்றி வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வருகிற 22–ந் தேதி நடக்கிறது. இதில் வெண்பன்றி பண்ணை அமைக்கத் தேவையான இனப்பெருக்க பன்றிகள் தேர்வு, பன்றிக் கொட்டகை அமைத்தல், இனப்பெருக்க பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் பாதுகாப்பு மற்றும் விற்பனை வாய்ப்பு ஆகியவை குறித்த தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் இந்த மையத்தை நேரில் அணுகி தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.
இந்த தகவலை கால்நடைப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் சிவக்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## பட்டு விவசாயிகளுக்கு ரூ.4 கோடி நலத்திட்ட உதவிகள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி வழங்கினார்

கோவை,பிப்.14–
கோவையில் நடைபெற்ற விழாவில் பட்டு விவசாயிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி வழங்கினார்.
நலத்திட்ட உதவிகள்
தமிழக அரசு பட்டு வளர்ச்சித்துறை மற்றும் சேலத்தில் உள்ள மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஆகியவை சார்பில், பட்டு விவசாயிகள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது.
விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி கலந்து கொண்டு 2 ஆயிரத்து 749 பட்டு விவசாயிகளுக்கு ரூ.3.77 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–
நாட்டிற்கு 25 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டு நூல் தேவைப்படுகிறது. ஆனால் நாம் 18 ஆயிரம் மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி செய்கிறோம். இதை ஈடுசெய்ய 7 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டு நூல் இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது. சுமார் ரூ.400 கோடி அன்னிய செலாவணியை மீட்க இந்த விழா அரசு நடத்துகிறது.
பட்டுக்கூடுகள் உற்பத்தி

*பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு 3–வது இடத்தில் உள்ளது. உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. சுமார் 30 ஆயிரம் ஏக்கரில் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் மஞ்சள் பட்டுக்கூடு உற்பத்தி அதிகமாக இருந்தது. தற்போது சீனாவை விட தரமான வெண் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை வருமானம் கிடைத்து உள்ளது.*

*தமிழகத்தை பொறுத்தவரை அதிகமான மானியம் பட்டு விவசாயத்திற்கே கொடுக்கப்படுகிறது. அதன்படி நடவுக்கு ரூ.10 ஆயிரத்து 312–ம், சொட்டு நீர் பாசனத்திற்கு ரூ.37 ஆயிரத்து 500–ம், பட்டுக்கூடு மனைக்கு ரூ.75 ஆயிரமும், தளவாடங்களுக்கு ரூ.30 ஆயிரமும், பயிற்சிக்கு ரூ.5 ஆயிரமும் என மொத்தம் ரூ.1 லட்சத்து 57 ஆயிரத்து 812 நிதி வழங்கப்படுகிறது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*யார்–யார்?*

*அதைத்தொடர்ந்து கைத்தறி, கைவினை பொருட்கள், ஜவுளி நூல் மற்றும் கதர் துறை முதன்மை செயலாளர் ராஜகோபால் தலைமை தாங்கி பேசினார். தொடர்ந்து தமிழக அரசின் பட்டு வளர்ச்சித்துறை இயக்குனர் பிரபாகரன் திட்ட விளக்க உரையாற்றினார். மத்திய பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய இயக்குனர் காத்ரி சிறப்புரை ஆற்றினார். வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் பாலகுருநாதன் கருத்துரை வழங்கினார். முடிவில் பட்டு வளர்ப்பு நிலைய விஞ்ஞானி பாலகிருஷ்ணா நன்றி கூறினார். முன்னதாக பட்டு வளர்ச்சித்துறை இணை இயக்குனர் முத்தையா வரவேற்றார்.*

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

**மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–**

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.600.00 | ரூ. 750.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 3.50 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.13.00 | ரூ.28.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.8.00 | ரூ.10.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.4.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.20.00 | ரூ.23.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| மேராக்காய் | ரூ.6.00 | ரூ.10.00 |